ஆளத்தெரியாத - நிர்வாகத் திறனற்ற த.வெ.க. அரசுக்கு எதிராகத் திரண்ட மகளிர்!



சட்டம் ஒழுங்குச் சீர்கேடு பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பின்மை விலைவாசி உயர்வைக் கண்டித்து கழக மகளிரணி சார்பில் திண்டுக்கல்லில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கழகத் துணை பொதுச் செயலாளர் இ.பெரியசாமி, மேற்கு மாவட்டச் செயலாளர் அர. சக்கரபாணி, கிழக்கு மாவட்ட செயலாளர் இ.பெ.செந்தில்குமார், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் வீரா.சாமிநாதன், கிழக்கு மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் இந்திரா, மேற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மலர்விழி செல்வி,மேற்கு மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் முத்துலட்சுமி, மதுரை மாவட்ட மகளிர் அணி லக்சிகா வேலுமணி, விருதுநகர் சித்ரா, மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், உள்பட திரளான மகளிர் அணியினர் கலந்து கொண்டனர்.



கடலூர் ஒருங்கிணைந்த தி.மு.க. மகளிர் அணி சார்பில்,த.வெ.க,அரசில் பெண்கள் குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், கடலூர் தலைமை தபால் நிலையம் அருகில் நடைபெற்றது. மாநகர மேயர் சுந்தரி ராஜா தலைமை தாங்கினார். மகளிர் அணி நிர்வாகிகள் ஜெயந்தி நடராஜன் பா.மனோரஞ்சிதம்,இந்துமதி சுதா சம்பத், ஆனந்தி சரவணன் மஞ்சு செல்வி கருப்புசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சி.வெ.கணேசன், முன்னாள் எம்.எல்.ஏ. அங்கயற்கன்னி ஆகியோர் சிறப்புரையாற்றினர், இந்நிகழ்வில் முன்னாள் எம்.எல்.ஏ., டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன்,இள.புகழேந்தி, சபா.இராசேந்திரன், துரை.கி.சரவணன் உள்ளிட்ட மகளிர் அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் காஞ்சிபுரம் மாநகராட்சியில் மேயர் மகாலட்சுமி யுவராஜ் தலைமையில் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு பெண்கள். பெண் குழந்தைகள் பாதுகாப்பு மின்மை விலைவாசி உயர்வைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், மாவட்ட கழக செயலாளர்.க. சுந்தர், நிவேதா ஜெசிகா, கண்டன உரையாற்றினார்கள் உடன் திருமதி மலர்விழி குமார், திருமதி செம்பருத்தி துர்கேஷ், திருமதி நித்யா சுகுமார் , மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஆ.செல்வி மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மாலதி செல்வராஜ் திருமதி மல்லிகா ராமகிருஷ்ணன் மற்றும் மாவட்ட மாநகர ஒன்றிய பகுதி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருச்சியில் தா.வெ.க. அரசின் சட்டம் ஒழுங்கு சீர்கேடு மற்றும் விலைவாசி உயர்வை கண்டித்து மத்திய வடக்கு மற்றும் கிழக்கு தொகுதி மகளிர் அணி சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யா னந்த் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கவிதா, துறையூர் கிருபா, ரம்யா பேகம் ,கவிதா மாணிக்கம், விஜயா ஜெயராஜ், திவ்யா கலைச்செல்வி, வாசுகி உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு தெற்கு மாவட்ட மகளிர் அணி சார்பில் தவெக ஆட்சியில் பெண்கள் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் விலைவாசி உயர்வை கண்டித்து வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமையில் மகாராஜன் எம்.எல்.ஏ. முன்னிலையில் கழக இளம் பேச்சாளர் கள் வழக்கறிஞர் பவித்ரா நடராஜன். கனிஷ்தா மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்கள் பவானி. ஜெப்ரின் ஜியான். சாரதா, ராமபிரியா ஆகியோர் முன்னிலையில் தேனி பழைய பஸ் நிலையம் அருகில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



டம்மி முதலமைச்சர் விஜயின் திரனற்ற ஆட்சியின் விளைவாய் அவதியுறும் பெண்களுக்கு நியாயம் வேண்டி திருவாரூர் மாவட்ட தி.மு.க. மகளிரணி சார்பில் பிரமாண்ட ஆர்ப்பாட்டம் முன்னாள் அமைச்சர் தமிழரசி ரவிக்குமார் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தஞ்சை மேயர் அஞ்சுகம் பூபதி, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் ஷோபா கணேசன், மாவட்ட மகளிர் தொண்டராணி அமைப்பாளர் விமலா பாலு மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மகளிர் அணியினர் பெருந்திரளாக பங்கேற்றனர்.